# நெய்தல் நில மக்களின் நம்பிக்கைகள்

*சி. முத்துக்கிருஷ்ணன்*
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*கணேசர் கலை அறிவியல் கல்லூரி*
*மேலைச்சிவபுரி*

மனிதன் தன் வாழ்வில் பார்த்தது, கேட்டது அனுபவத்தால் உணர்ந்து கொண்டது ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சில நிகழ்வுகளைத் தோற்றுவிக்கின்றான். அந்நிகழ்வுகள் சமூகத்தில் அங்கிகரிக்கப்படும்போது அல்லது பலரால் பின்பற்றப்படும் போது அவை மக்களிடையே நம்பிக்கையாக வளர்கின்றன. நம்பிக்கைகள் பெரும்பாலும் மனிதனின் அச்ச உணர்வினை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவையாகவே காட்சி தருகின்றன இயற்கையில் புதிரான செயல்களை உணர இயலாதபோதும், மனிதவாழ்வில் நிகழும் ஊறுகளுக்குக் காரணம் கற்பிக்கஇயலாத நிலையிலும் மனிதமனம் சிலவற்றைப்படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவை நம்பிக்கைகளாக உருப்பெறுகின்றன. சமுதாயச் சடங்குகளும் காலப்போக்கில் நம்பிக்கையாக மாறுகின்றன. மனிதன் இன்ப துன்பத்திலிருந்து தன்னைக் காத்துக்கொள்ளவே நம்பிக்கைகளை உருவாக்குகிறான். இந்த நம்பிக்கைகள் காலகாலமாக ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு மாறுகின்றன. பண்பாட்டிலும் அறிவாலும் சிறந்து விளங்கிய நெய்தல்நில சமுதாயத்தில் பலவகையான நம்பிக்கைகள் இருந்ததைக் காணமுடிகிறது.

**தெய்வம் பற்றிய நம்பிக்கை**

நெய்தல்நில மக்கள் வருணனை நிலத் தெய்வமாக வழிபட்டனர். கடலில் கிடைக்கும் பொருள்களை வைத்தே வழிபாட்டு. முறைகளை நடத்தினர். சுறாமீனின் கொம்பினை மணலில் நட்டு வைத்து வழிபட்ட முறையை பட்டினப் பாலையில் காணமுடிகிறது.

**கிடுகுனிரைத் தெ.்.கூன்றி**
**நடுகல்லின் அரண்போல**
**நெடுந்துாண்டிலில் காழ்சேர்த்திய**
**குறுங்கூரைக் குடிநாப்பின்**
**நிலவடைந்த இருள்போல வலை உணங்கு மணல் முன்றில்**
**வீழ்த்தாழைத் தாட்டாழ்ந்த**
**வெண் கூதாளத்துத் தண்பூங்கோதையர்**
**சினைச் சுறவி கோடு நாட்டு**
**மனைச் சேர்த்திய வல்லணங்கினான்**
**மடந்தாழை மலர் மலைந்தும்**
**பிணர்ப் பெண்ணைப் பிழிமாந்தியும்**
**புன்றழை இரும் பரதவர்**
**பைந்தழைமா மகளிரோடு (பட்டின. 78-91)**

பரதர் தாழையின் அடியிலே நின்று வெண்டாழையின் குளிர்ந்த மலரால் தொடுத்து மாலையினை அணிந்தனர். இந்நிலத்தெய்வமாகிய வருணனைச் சினைச் சுறாக் கொம்பினை நட்டு வலை வளம் பெருக வேண்டும் என வழிபட்டனர். அத்தெய்வத்திற்குப் படைத்த தாழை மலரைச் சூடிக்கொண்டு பனங்கள்ளைப் பருகினர். பரந்த கருமையுடைய குளிர்ந்த கடலில் மீன் பிடிப்பதற்குச் செல்வதைத் தவிர்த்தனர். முழுமதி நாளில் தம் மனம் விரும்பிய உணவை உண்டும் மனம் விரும்பியவாறு ஆடியும், பாடியும் வருணனை வழிபட்டனர்.

சுறாவின் கோட்டில் தெய்வம் வரவழைத்தமை தெய்வ வழிபாட்டின் தொடக்கநிலையினைச் சுட்டுவதோடு நிலத்தியல்பின் அடிப்படையில் தங்கள் தொழிலுக்கு இடையூறாக அமையும் அச்சம் தரும் விலங்கினை வழிபட்ட நிலையினதாகவும் அமையகாண்கிறோம். மேலும் இங்குச் சினைச் சுறா எனக் குறிப்பிட்டிருப்பது தெய்வத்தன்மையின் ஆற்றல் கருதிப் பயன் கொண்ட ஒன்றாகக் காட்சியளிக்கின்றது.

''அணங்கு என்பது இயற்கையான அச்சந்தரக்கூடிய பொருள்கள், இடங்கள் ஆகியவற்றில் உறையும் தன்மை பெற்ற சக்தியாகக் கருதக்கூடியதாக அமைகிறது. அச்சக்தியின் சீற்றத்தினைத் தணிப்பதற்காக வழிபட்டு, பலிகொடுத்த நிலை மனிதனின் நம்பிக்கையினையும், தற்காப்பினையும் புலப்படுத்துவதாக உள்ளது.'' மனிதர்களுக்கு இயற்கையின் மீது கொண்ட அச்சத்தின் காரணமாகவே தெய்வ நம்பிக்கை தோன்றியது எனலாம்.

**"அணங்குடைப் பணித்துறை கைத் தொழுது ஏத்தி**
**யாவும் ஆயமொடு அயரும்" (- அகம் 240:8-9)**

நெய்தல் நில மக்கள் தம்சுற்றத்துடன் கூடித் தம்தெய்வமாகிய வருணனைக் கையாலே வழிபடும் மரபினைக் குறிக்கிறது. நீர்த்துறைக்கண் தெய்வங்கள் வாழும் என்ற நம்பிக்கை நெய்தல் நில மக்களிடம் இருந்ததை மேற்கண்ட பாடல்வரிகள் விளக்குகின்றன.

**சங்கு வழிபாடு பற்றிய நம்பிக்கை**

கடலில் கிடைக்கும் அரிய பொருள்களில் சங்கும் ஒன்று. இதன் பயன்பாடுகள் பற்றியும், வகைகள் பற்றியும் பண்டைத்தமிழர்கள் நன்கு அறிந்து வைத்திருந்தனர். தமிழர்கள் சங்கை வழிபடுபொருளாகவும் வழிபாட்டுப் பொருளாகவும் கருதிப் போற்றி வந்துள்ளதை நெய்தல் திணைப் பாடல்கள் விளக்குகின்றன. இல்லத்தில் சங்கு வைத்திருந்தால் செல்வம் பெருகும் என்ற நம்பிக்கையால் பெரும்பாலான தமிழர் வீடுகளில் இன்றைக்கும் சங்கை வைத்துள்ளனர்.[10]

நெய்தல்நில மக்கள் வலம்புரி ஈன்ற முத்துக்களைப் பங்கிட்டுக் கொள்வதும் அவற்றை விற்பதும் போல வலம்புரிச் சங்கையும் அது ஈன்ற முத்தையும் தம் விருப்பத் தெய்வத்திற்கு வழிபாடு செய்யும் போது நேர்த்திக் கடனாக வைத்தனர்.

**"புகழ்மலி சிறப்பின் கொற்கை முன் துறை**
**அவிர் கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து**
**தழை அணிப் பொழிந்த கேளயேந்து அல்குல்**
**பழையர் மகளிர் பனித்துறைப்பரவ" (-அகம் 201:4-7)**

நெய்தல்நில மக்கள் கடல் அளித்த சங்கையும், முத்தையும் நேர்த்திக் கடனாகப் பரவி வழிபாடு செய்துள்ளதை அகநானூற்றுப் பாடல்வரியால் அறியலாம். சங்கு நீர் வழிபாடு இன்றைக்கும் பல கோவில்களில் வழக்கமாக உள்ளதைக் காணமுடிகிறது. இயற்கையின் மீது கொண்ட அச்சத்தின் காரணமாகத் தோன்றிய தெய்வ நம்பிக்கை பின்னர் காலம் செல்லச் செல்ல பயன் கருதி தொடர்ந்து வாழையடிவாழையாக வந்துள்ளதைக் காணமுடிகிறது.

**நிமித்தம் பற்றிய நம்பிக்கை**

நிமித்தம் என்பது வாழ்வில் பின் நிகழவிருக்கும் நன்மை தீமைகளைச் சில குறியீடுகளின் வாயிலாக முன் உணர்த்துவதாகும். இதனை சகுனம், நிமித்தம் எனக் குறிப்பிடுகின்றோம். வாழ்வில் நிகழும் நன்மை தீமைகளை அடிப்படையாகக் கொண்டு அவை நன்னிமித்தம், தீநிமித்தம் என இருவகையாகப் பாகுபடுத்தலாம்.

நிமித்தங்கள் நம்பிக்கைகள் பாற்பட்டன நம் செயல்களுக்கும், இயற்கையின் செயல்களுக்கும் தொடர்பு காட்டுவது நிமித்தங்களின் செயற்பாடாகும். இயற்கை நிகழ்வுகளுக்கும் மனிதனின் செயல்களுக்கும் தொடர்புண்டு என்ற கருத்தோற்றத்தின் அடிப்படையில் அவை நம்பப்படுகின்றன நிமித்தங்களும் அச்சத்தின் அடிப்படையிலேயே தோன்றி இருக்கக்கூடும். ஏதாவது ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன் நல்ல நாளும், பொழுதும், நன்னிமித்தமும் பார்த்துத் தொடங்குவது தமிழ் மக்களிடம் தொன்றுதொட்டு இருந்துவரும் ஒரு வழக்கமாகும். அணங்கு என்னும் தெய்வம் உறையும் கடல்நீரில் பாய்ந்த உப்புவயல்களில் வெம்மையால் காய்ந்த வெண்கடல் அமிர்தமான உப்பை மேற்குப் பகுதிக்குக் கொண்டு செல்வர். அவ்வாறு செல்லும் முன் பறவையை மையமாகக் கொண்டு நன்நிமித்தம் பார்த்தலை அகநானூறுப் பாடல்வரிகளில் அறியமுடிகிறது.

**"அணங்குடை முந்நீர் பரந்த செறுவின்**

**உணங்கு திறம் பெயர்ந்த வெண்கல் அமிழ்தம்**

**குடபுல மருங்கின் உய்ம்மார் புள் ஓர்த்து"** (அம் - 207:1-4)

பறவையை நன்னிமித்தமாகக் கொள்வதும், சிலவிலங்குகளை நன்னிமித்தமாகக் கொள்வதும் பண்டைய மக்களிடம் வழக்கத்தில் இருந்ததை சங்கப்பாடல்கள் மூலம் தெரிந்து கொள்ளமுடிகிறது.

சந்திரனுக்குப் பக்கத்தில் தோன்றும் நட்சத்திரத்தை நம் முன்னோர்கள் வெள்ளி என்று அழைப்பர். இதை வெண்மீன் எனப் பட்டினபாலையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"வசையில் புகழ்வயங்கு வெண்மீன்**

**திசைதிரிந்து தெற்கு ஏகினும்"** (பட்டினப் - 1-2)

வெள்ளி எனும் கோள் சந்திரனுக்குத் தென்திசையில் தோன்றுவது தீநிமித்தம் என நம்முன்னோர்கள் எண்ணினர்.

**கனவு பற்றிய நம்பிக்கை**

இரவில் நாம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது தோன்றுவது கனவாகும். பெரும்பான்மையான கனவு நடுஇரவிலும், அதிகாலையிலும் தோன்றுவது மரபு. இதில் அதிகாலையில் தோன்றும் கனவு பலிக்கும் என்பது நம்முன்னோர்களின் நம்பிக்கை. சிலப்பதிகாரத்தில் கண்ணகி கண்ட கனவும், கோவலன் கண்ட கனவும் பலித்ததை இளங்கோவடிகள் எடுத்துக் கூறியுள்ளார். அதுபோல சங்க இலக்கியத்தில் கனவு பற்றிய பாடல்கள் பலஉள.

**"களனல்அம் சேர்ப்பனைக் கண்டார்ப் போல்**

**புதுவது கவினினை என்றியாயின்**

**நனவின் வாரா நயனியாளனைக்**

**கனவில் கண்டு யான் செய்ததுகேள்"** (கலி:1286-9)

கனவில் கண்ட தலைவன் நனவில் வருவான் என்று எண்ணித் தலைவி உயிர் வாழ்ந்ததைக் கலித்தொகைப் பாடல் அடிகள் எடுத்துக் காட்டுகின்றன.

**"நனவினால் நல்கா தவரைக் கனவினால்**

**காண்டலின் உண்டென் உயிர்"** (குறள் – 1213)

உண்மையாக வந்து அன்பு காட்டாதவரைத் தினமும் கனவில் கண்டு மகிழ்வதால் என் உயிர் உடலில் தங்கி இருக்கிறது என வள்ளுவர் காட்டும் தலைவி கூறுவது. எனவே கனவு பற்றிய நம்பிக்கை ''கனவுநிலை உரைத்தல்'' என்ற ஒரு அதிகாரத்தை இன்பத்துப் பாலில் வைத்துள்ளார் திருவள்ளுவர் ஆதலால் கனவு பற்றிய நம்பிக்கை நம் முன்னோர்களிடம் அதிகம் இருந்ததைக் காட்டுகிறது.

**ஊழ் பற்றிய நம்பிக்கை**

''முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'' என்று ஊழ்பற்றிய நம்பிக்கை விதி, தலைவிதி, வினை என்று பல பெயர்களில் அழைக்கப்படுவது ஊழ் ஆகும். முற்பிறப்பில் ஒருவர் செய்த நல்வினை, தீவினைகளுக்கேற்ப இப்பிறப்பில் அவருடைய இன்ப துன்பங்கள் அமையும் என்ற கொள்கை நம் தமிழர்களிடையே இருந்ததை நற்றிணைப்பாடல் அடிகள் விளக்குகின்றன.

**"யாம் செய்தொல் வானைக் கெவன் பே துற்றனை**

**வருந்தல் வாழிதோழி"** (நற்:88:1—2)

நீதிநூலான திருக்குறளிலும் பழமொழி நானூற்றிலும் ஊழுக்கென்று தனி அதிகாரம் வகுத்திருப்பது ஊழின் மீது சங்கத்தமிழர் கொண்டிருந்த நம்பிக்கையைக் காட்டுகிறது. ஊழ்வினைக் கொள்கை பிறப்பு. சுவர்க்கம் நரகம் ஆகிய நம்பிக்கைகளோடு நெருங்கிய தொடர்புடைய ஒன்றாகக் காட்டப்பட்டுள்ளது.

**முற்பிறவி பற்றிய நம்பிக்கை**

உயிர்கள் வினைகளுக்கேற்ப பிறவிகள் எடுக்கின்றன என்பது நம்முன்னோர்களின் எண்ணக் கருத்தாகும். முற்பிறப்பில் நன்மையடைதலும், தீவினை ஆற்றியோர் துன்புறுத்தலும் வினைக்

கொள்கையாகும். பிறப்பு என்பது தம்முடைய வினையின் பயனுக்குத் தக்க அமையும் என்பது பண்டைய சமூக நம்பிக்கை.

**“புதுவது ஆகின்று அம்ம – பழவிறல்**

**பாடு எழுந்து இரங்கு முந்நீர்” (அகம் - 400:24-25)**

முற்பிறவியில் செய்த நல்வினையின் பயனை மேற்கண்ட பாடலடிகள் எடுத்துக் கூறுகின்றன.

**“அருந்தவம் முயறல் ஆற்றாதேமே” (ஐங்-111:5)**

தலைவனோடு கொண்ட நட்பினை முற்பிறவியில் நல்ல தவத்தினைச் செய்யாத நாம் இப்பபிறவியில் நல்ல தவத்தினைச் செய்யாத நாம் இப்பிறவியில் பிரிந்தும் வாழ இயலுமா? எனத் தலைவி தோழியிடம் கூறுவதாக இப்பாடல் அமைகிறது.

**“இம்மைமாறி மறுமை யாயினும்**

**நீயாகியள் எம் கணவனை” (குறு-49:3-4)**

தலைவன் தலைவியின் அன்புடைமை பிறவிதோறும் தொடரும் என்பதைக் குறுந்தொகைப் பாடலடிகள் விளக்குகின்றன. இம்மை, மறுமை பற்றிய சிந்தனையும், மறுபிறப்புப் பற்றிய சிந்தனையும். வினைப்பயன் தொடர்வது பற்றிய சிந்தனையும் சங்ககால மக்களிடம் காணப்பட்டமையை இவ்வடியின் மூலம் அறியலாம்.

**பேய்பற்றிய நம்பிக்கை**

நெய்தல்நிலப் பாடல்களில் அச்சந்தரக் கூடியவையாக பேய், பூதம் போன்றவை காட்டப்பட்டுள்ளன. பேய், பூதம் மனித வாழ்வியலோடு இணைத்து பேசப்பட்டுள்ளன. பேய் என்பது அச்சந்தரக்கூடியது, பேய் பற்றிய நம்பிக்கை பண்பட்ட மற்றும் பண்படாத மக்களிடையே உலகெங்கும் இருந்து வருகிறது. இயற்கைச்சூழலில் வாழ்ந்த மனிதனிடம் இது பற்றிய கருத்தோட்டங்கள் மிகுதியாக உண்டு. செயற்கைச்சூழலில் வாழும் இன்றைய நாகரிக மனிதனிடமும் பேய் பற்றிய நம்பிக்கை இல்லாமில்லை.

**“மன்ற மராத்த யேமுதிர்கடவுள்**

**கொடியோர் தெறூஉம்” (குறு-87:1-2)**

பேய் பிள்ளைகளைப் பறித்துக் கொண்டு சென்றுவிடும் என்ற நம்பிக்கை இருந்ததை நற்றிணைப் பாடலடிகள் விளக்குகின்றன.

**“நேர்புடை செஞ்சந் தாங்கத் தாங்கி**

**மாசில் கற்பின் மடவோள் குழவி**

**பேஎய் வாங்கக் கைவிட்டாங்கச்**

**சேணும் எம்மொடு வந்த**

**நாணும் விட்டோம் அலர்கவின் ஆரே” (நற்-15:6-10)**

தலைவி தன் நாணத்தைக் கைவிட்டதற்கு உவமையாகப்பேய் குழந்தையைப் பறித்துச் சென்றது போல எனக் கூறப்பட்டிருப்பது, அவர்களின் பேய் பற்றிய நம்பிக்கையைக் காட்டுகிறது.

**முடிவுகள்**

1. நெய்தல்நில மக்கள் தெய்வம் நம்பிக்கை அதிகம் கொண்டிருந்தனர். கடல் தெய்வத்தை வழிபட சுறா மீன் கொம்பினையும், சங்கு போன்ற பொருள்களையும் பயன்படுத்தியுள்ளனர்.
2. சங்கு வைத்து வழிபடும் முறை நெய்தல் நிலத்தில் இருந்து பிற இடங்களுக்குப் பரவியுள்ளது. இன்றைக்கும் ஆலயங்களில் சங்கு வழிபாடு முறை உள்ளது.
3. நிமித்தம் பார்க்கும் வழக்கம் ஐவகை நிலங்களிலும் இருந்ததைச் சங்கப்பாடல்கள் உணர்த்துகின்றன. கனவு பற்றிய நம்பிக்கை, பேய் பற்றிய நம்பிக்கை, ஊழ் பற்றிய நம்பிக்கையும் நெய்தல் நில மக்களிடம் இருந்ததை நெய்தல் திணைப்பாடல்கள் உணர்த்துகின்றன.

**துணைநூற்கள்**

1.சு.காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்.

2.தி.முத்துக்கண்ணப்பர், சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம்.

3.அ.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகம் பண்பாடும்.